# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.5/2024

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw6/Pw2 |
| Name | : Sivakumar |
| Father/Husband's Name | :Narayanan |
| Village | : |
| Taluk | : Villupuram |
| Calling | : |
| Age | : 56 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.09.2025.

**முதல் விசாரணை:**

நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2021ம் ஆண்டு, தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒரு நாள், எனது தங்கை வீட்டுகாரர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டு, சம்பவ இடமான வித்யா சாகர் கல்லூரி மேம்பாலம் அருகே வந்தபோது, போலீசார் விபத்து சம்பந்தமாக விசாரணை செய்து வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் **அதசா.ஆ2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

எனது தங்கையின் கணவர் விபத்தில் இறந்ததை குறித்து நான் புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். அங்கு போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். நான் காவல்நிலையத்தில் வைத்து தான் அதசா.ஆ2 பார்வை மகசரில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் தட்டச்சு செய்த ஆவணத்தில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். இறந்தவர் எனது தங்கையின் கணவர் என்பதால், இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் போலீசார் விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open

court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.